

சூரிய சக்தி மின்விளக்குகள் வழங்கும் திட்டத்தை மத்திய மந்திரி பரூக் அப்துல்லா தொடங்கிவைத்தபோது எடுத்த படம். அருகே, எம்.பி.நிர்மல், 'இந்து' என்.முரளி, சி.எச். வெங்கடாசலம், வேல்முருகன் ஆகியோர் உள்ளனர்.

# சூரிய சக்தி மின்சாரம் மூலம், விரைவில் அனைத்து கிராமங்களுக்கும் மின் ஒளி வழங்கப்படும்

## சென்னையில் மத்திய மந்திரி பரூக் அப்துல்லா பேச்சு

சென்னை, செப்.8–
'சூரிய ஒளி மின்சாரத்தின் மூலம் நாட்டில் உள்ள எல்லா கிராமங்களுக்கும் மின் ஒளி வழங்கும் காலம் விரைவில் வரும்' என்று மத்திய மந்திரி பரூக் அப்துல்லா பேசினார்.

### சூரிய சக்தி மின் விளக்கு

கிராமப்புறங்களை சூரிய சக்தி மின் ஒளியில் பிரகாசிக்கச் செய்யமுடியும் என்ற தொடர் முயற்சியில் சோல்கர் நிறுவனமும், எக்ஸ்னோரா இன்டர்நேஷனல் அமைப்பும் இணைந்து கே.டு.கே. (காஷ்மீரில் இருந்து கன்னியாகுமரி வரை) என்ற திட்டத்தின் கீழ் 10 ஆயிரம் சூரிய சக்தி மின் விளக்குகளை நாடு முழுவதும் அளிக்கும் திட்டத்தை செயல்படுத்த முன்வந்துள்ளது.

அதன் முதல் கட்டமாக, எக்ஸ்னோரா இன்டர்நேஷனல் அமைப்புடன் 'சுஸ்லான் பவுண்டேஷன் சோல்கர்' இணைந்து 1000 குடும்பங்களுக்கு சூரிய மின்சக்தி விளக்குகள் வழங்கும் விழா சென்னையில் நேற்று நடந்தது.

### பரூக் அப்துல்லா வழங்கினார்

இந்த விழாவில், மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை மந்திரி பரூக் அப்துல்லா கலந்து கொண்டு 1000 குடும்பங்களுக்கு சூரிய சக்தி மின்சார விளக்குகளை வழங்கி பேசியதாவது:–

இந்தியாவில் அனல் மின் உற்பத்திக்காக இந்தோனேஷியா, தென் ஆப்பிரிக்கா போன்ற வெளிநாடுகளில் இருந்து நிலக்கரி வாங்குகிறோம். நிலக்கரி மூலம் கிடைக்கக்கூடிய மின் உற்பத்தி மட்டுமின்றி வேறு பல வழிகளிலும் மின்சாரம் உற்பத்தி செய்கிறோம். காற்றாலை மின் உற்பத்தியில் தமிழகம் முன்னிலையில் உள்ளது.

### அனைத்து கிராமங்களுக்கும்

பல்வேறு வகைகளில் மின் உற்பத்தி இருந்தபோதிலும், மின் பற்றாக்குறை இருந்து வருகிறது. இதைப் போக்குவதற்காக எனது தலைமையிலான புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை மூலம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பெட்ரோலியப் பொருட்களுக்கு மத்திய அரசு வழங்கும் மானியத்தில் ஒரு பகுதியை புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறைக்கு தாருங்கள் என்று கேட்டுள்ளேன்.

சூரிய சக்தி மின்சார (சோலார்) உற்பத்தியின் மூலம் நாட்டில் மின்சார பற்றாக்குறையே இல்லை என்று சொல்லும் காலம் நிச்சயம் வரும். சூரிய சக்தி மின்சாரத்தின் மூலம் நாட்டில் மின் உற்பத்தியில் மிகப்பெரிய மாற்றத்தைக் கொண்டுவருவோம். சூரிய சக்தி மூலம் கிடைக்கக்கூடிய மின்சார உற்பத்தியைக் கொண்டு நாட்டில் உள்ள அத்தனை கிராமங்களில் உள்ள வீடுகளுக்கும் மின் ஒளியைத் தர முடியும் என்ற உத்தரவாதத்தையும் அளிக்கிறேன்.

இங்கு சூரிய சக்தி மின்சார (சோலார்) மின்விளக்குகளை இலவசமாக வழங்கினார்கள். அப்படி வழங்குவதைக்காட்டிலும் மிகக்குறைந்த விலையில் இது போன்ற விளக்குகளை வழங்கலாம். இலவசமாக வழங்கினால் பராமரிக்க மாட்டார்கள். பணம் கொடுத்து வாங்கினால் அதை கவனமாக பராமரிப்பார்கள்.

இவ்வாறு மத்திய மந்திரி பரூக் அப்துல்லா பேசினார்.

விழாவில், மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை செயலாளர் தீபக் குப்தா, 'இந்து' பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் என்.முரளி, எக்ஸ்னோரா இன்டர்நேஷனல் நிறுவனர் எம்.பி.நிர்மல், அகில இந்திய வங்கி ஊழியர்கள் சங்க பொதுச்செயலாளர் (ஏ.ஐ.பி.இ.ஏ.) சி.எச். வெங்கடாசலம் ஆகியோர் பேசினார்கள். விழாவில், சுஸ்லான் குழுமத்தின் இயக்குநர் ஆர்.எ.பார்மர், வேலம்மாள் பள்ளிகளின் முதன்மை நிர்வாக அதிகாரி வேல்முருகன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, சோல்கார் நிறுவன நிர்வாக இயக்குநர் கே. இ.ரகுநாதன் வரவேற்று பேசினார். (முடிவில்) எக்ஸ்னோரா